



புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் எம்.டி.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் மறைவுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி வனத்துறை அமைச்சர், கழக துணைப் பொது செயலாளர் முனைவர் க.பொன்முடி அஞ்சலி செலுத்தி அவரை பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். புதுச்சேரி எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா எம்.எல்.ஏ., முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி, புதுச்சேரி மாநில அவைத் தலைவர் எஸ்.பி.சிவக்குமார், காங்கிரஸ் புதுச்சேரி மாநிலத் தலைவர் வைத்தியலிங்கம் எம்.பி, புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர்கள் நாஜிம், அனிபால் கென்னடி, செந்தில்குமார், சம்பத், நாக தியாகராஜன், வைத்தியநாதன் உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.





மாநிலம் முன்னேறிட, தமிழர்கள் வாழ்வு செழிக்க, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியே நீடிக்க வேண்டுமென உணர்ந்து, கரூர் மாவட்டக் கழகச் செயலாளர், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி முன்னிலையில், அ.தி.மு.க.வைச் சேர்ந்த கரூர் மாவட்ட இலக்கிய அணிச் செயலாளர் கமலக்கண்ணன், கரூர் தெற்கு நகர மகளிர் அணி இணைச் செயலாளர் ஜோதி ஆகியோர் தலைமையிலும், அ.தி.மு.க. கரூர் தெற்கு நகர மாணவர் அணி துணைச் செயலாளர் பிரவீன், 44வது வார்டு துணைச் செயலாளர் விக்டோரியா உள்ளிட்டோர், ஏமூர் நடுப்பாளையம் கண்ணதாசன், ஏமூர்புதூர் சிவசுப்பிரமணியன் தலைமையிலும், மாற்றுக் கட்சியைச் சேர்ந்த வெங்கடேசன் தலைமையில் 200 பேர், காக்காவாடி இந்திரா காலனி அ.தி.மு.க. கிளைக் செயலாளர். சுப்பிரமணி, பா.ஜ.க. காக்காவாடி ஊராட்சி செயலாளர் தமிழ்ச்செல்வன், பா.ஜ.க. மாவட்ட விளையாட்டு அணி துணைத்தலைவர், புத்தம்பூர் சமத்துவபுரம் கார்த்தி தலைமையில், காக்காவடி எம்.தினேஷ், எம்.கே.கணேஷ் மூர்த்தி, மலைக்கோவிலூர் அருள் ஆகியோரின் ஏற்பாட்டில், 200க்கும் அதிகமான அ.தி.மு.க.வினர் மற்றும் பா.ஜ.க.வினர் செங்காட்டானூர் அ.தி.மு.க. கிளைச் செயலாளர் கருப்பண்ணன், செல்லரபாளையம் பொன்னுசாமி, சக்தி நகர் கிளைச் செயலாளர் தர்மராஜ், ஏ.டி.காலனி, குமார், லோகநாதன், அ.தி.மு.க. கரூர் மாவட்ட வர்த்தக அணி துணைச் செயலாளர் ஜெகதீஷ் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்.

### பல்வேறு தலைப்புகளில் கருத்துரை!

# மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் சார்பில் - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் – முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் பங்கேற்பு!

மும்பை, டிச.11

மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவில் தமிழ்நாடு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் சார்பில் 08-.12.-2024 ஞாயிறு மாலை 5 மணிக்கு பாண்டூப் மேற்கு பகுதியில் அமைந்துள்ள பிரைட் மேல்நிலைப் பள்ளி கல்வித் தந்தை தேவதாசன் வளாகத்தில் விழா நடைபெற்றது.

முதன்முதலில் அந்த பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. வடமொழியை தாய் மொழியாகக் கொண்ட மாணவச் செல்வங்களால் தமிழ்த்தாய் வாழ்த்துடன் கலைஞர் நூற்றாண்டு நிறைவுவிழா துவங்கியது.

கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்தை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனும், சமீபத்தில் மறைந்த முரசொலி செல்வம் அவர்களின் படத்தை முன்னாள் அமைச்சர் மு.தென்னவனும், தந்தை பெரியார் அவர்களின் படத்தை திருமதி சுகுணா அன்பழகனும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் படத்தை திருமதி ஜஸ்டினா ஜேம்ஸ், பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் படத்தை திருமதி விண்ணரசி சேசுராசு, மும்பையில் கழகம் வளர்த்த தளகர்த்தர்களாம் மறைந்த தலைவர்கள் எஸ்.தியாகராசன் படத்தை திருமதி ஜெலின் ஜேக்கப், த.மு.ஆரியசங்காரன் படத்தை திருமதி லட்சுமி மாணிக்கம், த.மு. பொற்கோ படத்தை திருமதி.நங்கை குமணராசன், கல்வித்தந்தை வி.தேவதாசன் படத்தை திருமதி ஜானகி மாறன் ஆகியோரும் திறந்து வைத்து மரியாதை செய்தார்கள்.

அதன் பிறகு “காலத்தை வென்ற கலைஞர்” என்கிற பொதுத் தலைப்பில் கருத்தரங்கம் காரைக்குடி கலைஞர் தமிழ்ச் சங்க நிறுவனர் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் தலைமையில் நடைபெற்றது.

மும்பை கலைஞர் தமிழ்ச் சங்க புரவலர் பொ.அன்பழகன் தொடங்கி வைத்தார்.

“சமூக நீதியின் சமத்துவக் காவலர்” என்கிற தலைப்பில் நாகை மாவட்ட திமுக துணைச் செயலாளர் ஆரூர் மணிவண்ணன், “சரித்திரம் போற்றும் சாதனை நாயகர்” என்கிற தலைப்பில் மும்பைச் சாரல் இதழின் ஆசிரியர் திருமதி ஜெயதுர்கா ராஜன், “இணையில்லா இலக்கிய வேந்தர்” என்கிற தலைப்பில் ஞான சேகரன் கல்வி அறக்கட்டளை தென்பாதி சீர்காழி சீ.இராசேந்திரன், “மானமுள்ள சுய மரியாதைக்காரர்” என்கிற தலைப்பில் மும்பை எழுத்தாளர் கவிஞர் புதியமாதவி ஆகியோரும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழுரை நிகழ்த்தினார்கள்.

அதன்பிறகு நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்விற்கு கலைஞர் தமிழ்ச் சங்கச் செயலாளர் ஜேம்ஸ்தேவதாசன் வரவேற்பு உரை நிகழ்த்த, மும்பை கலைஞர் தமிழ்ச் சங்க நிறுவனர்/ தலைவர் முன்னாள் திமுக இளைஞரணி அமைப்பாளர் ம.சேசுராசு விழாவிற்கு தலைமை வகித்தார்.

இலவச நல உதவிகள் வழங்கி கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பு மலரை வெளியிட்டு விழா நிறைவுப் பேருரையாற்றிய தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நூற்றாண்டு நிறைவு விழா மலரின் முதல் பிரதியை வெளியிட, மும்பை கம்பன் பள்ளி நிறுவனர் கல்வித் தந்தை எம்.ஏ.சூசை பெற்றுக் கொண்டார்.

சிறப்பு அழைப்பாளர்களாக சஞ்சய் தீனா பாட்டில் எம்.பி., மும்பை பிரதேச காங்கிரஸ் கட்சி துணைத்தலைவர் கணேஸ் குமார் யாதவ், நவிமும்பை கல்விக்கழக முன்னாள் தலைவர் ரவிஐயர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டார்கள்.

கலைஞர் தமிழ்ச் சங்க பொருளாளர் க.மு. மாணிக்கம் கலைஞர் தமிழ்ச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ம.நீதித்துரை, இரா.மதியழகன், பேலஸ்துரை தமிழ் இலெமுரியா அறக்கட்டளை நிறுவனர் சு.குமணராசன்,மும்பை திராவிடர் கழக தலைவர் பெ.கணேசன், மும்பை ஆதிதிராவிட மகாஜன சங்கத்தின் முன்னாள் தலைவர் கே.வி.அசோக்குமார்,விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநகர அமைப்பாளர் எஸ்.சாலமோன் ராஜா, மும்பை பகுத்தறிவாளர் கழக தலைவர் அ.ரவிச்சந்திரன், மும்பை ஆதிதிராவிட மகாஜன சங்க தலைவர் எஸ்.பி.ஆனந்த், காரை கரு. ரவீந்திரன், ஆ.பாலசுப்பிரமணியன், காமராஜர் பள்ளி தலைவர் எம்.எஸ். காசிலிங்கம், முன்னாள் மும்பை மாநகர்மன்ற கவுன்சிலர் மாரியம்மாள் முத்துராமலிங்கம், சிவசேனா கட்சியை சார்ந்த எஸ்.அண்ணாமலை, காங்கிரஸ் கட்சியை சார்ந்த அருணாச்சலம்,தொழிலதிபர் சாமி பிள்ளை, பாண்டுப் ராஜ்குமார், ஜெரிமெரி தமிழ்ச்சங்கத் தலைவர் இல.முருகன், தமிழ் ஓட்டுனர்கள் சங்கத் தலைவர் இரா.ரவிரஜினி, தானே ஜாகீர் உசேன், வே.ரவிச்சந்திரன், அலெக்சாண்டர், தாராவி ராஜன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்பித்தனர்.

மும்பையில் சமூக சேவையாற்றி வரும் இலெமுரியா அறக்கட்டளை நிறுவனர் சு.குமணராசன், தமிழின பயணிகள் இரயில்வே சங்கச் செயலாளர் டி.அப்பாத்துரை,மலாட் தமிழர் நலச்சங்கம் தலைவர் லெ.பாஸ்கரன் ஆகியோர் சேவையை பாராட்டி நினைவுப் பரிசும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

மும்பையில் திமுக வளர்ச்சிக்கு உழைத்த மூத்த தொண்டர்கள் 22 பேரை பாராட்டிக் கவுரவிக்கப்பட்டது. பள்ளி மாணவர்களுக்கு புத்தகப்பை, சேலைகள் கலைஞர் படம் பொறித்த சுவர்க்கடிகாரம், 2025-ஆம் ஆண்டுக்கான தினசரி நாட்காட்டி மற்றும் பாந்திரா திமுக மூத்த தொண்டர் இ.கலியமூர்த்தியின் மருத்துவ செலவுக்கு பத்தாயிரம் வழங்கப்பட்டது. கலைஞர் அவர்கள் தலைமையில் திருமணம் நடந்த தமிழ் இலக்கியா- ஆறுமுகத்துக்கு 13 வருடங்கள் கடந்து ஆண்குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு அமைச்சர் பிரபு உதயநிதி என்று பெயர் சூட்டினார்.

செல்வி கவியரசி சேசுராசு விழா நிகழ்ச்சி நிரல்களைத் தொகுத்து வழங்கினார்.

நிறைவாக கலைஞர் தமிழ்ச் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர் மாறன் ஆரியசங்காரன் நன்றி நவில விழா இனிதே நிறைவு பெற்றது. விழாவிற்கு முன்பு பாட்டுக் கச்சேரி நடைபெற்றது.

விழா ஏற்பாடுகளை தலைவர் ம.ஜேசுராஜ் தலைமையில், செயலாளர் ஜேம்ஸ் தேவதாசன், பொருளாளர் க.மு. மாணிக்கம், புரவலர் பொ.அன்பழகன் மற்றும் கலைஞர் தமிழ்ச் சங்கம் நிர்வாகிகள் சிறப்பாகச் செய்திருந்தனர்.




மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. புதூர் பகுதி சார்பில் துணை முதலமைச்சர், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஆதரவற்ற மாற்றுத்திறனாளி ஏழை மாணவ – மாணவியருக்கு மதிய அறுசுவை உணவினை மண்டலத் தலைவர் சரவண புவனேஸ்வரி, பகுதிச் செயலாளர் புண்ணியமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் 14வது வார்டு மாமன்ற உறுப்பினர் சபரிராயன் அந்தோணியம்மாள் ஏற்பாட்டில், மாணவரணி அமைப்பாளர் துரை கோபால்சாமி என்ற அன்பு வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் ஆர்.ஆர்.மகேந்திரன், பி.எம்.மருது, வி.சி. மாதவன், ராஜேஷ் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மையினரின்

# பொருளாதார முன்னேற்றத்திற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி!



புதுடெல்லி, டிச. 11-

“ஒன்றிய அரசின் ‘தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி நிதி நிறுவனம்’ (the National Minority Development Finance Corporation NMDFC) தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மையினரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? என்றும், தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள சிறுபான்மையினருக்கு பயனுள்ள வகையில் நலத்திட்டங்கள் சென்றடைவதை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்றும் பயனாளிகள் விபரங்கள் பற்றியும் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த இந்திய ஒன்றிய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ அவர்கள் “தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TAMCO) என்பது தமிழ்நாட்டில் ஒன்றிய அரசின் ‘தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி நிதி நிறுவனத்தின் (NMDFC) மாநில முகவாண்மை. இந்த முகவாண்மை தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி நிதி நிறுவனத்தின் தொழிற்கடன், கல்விக் கடன் மற்றும் நுண்கடன் திட்டங்களை செயல்படுத்துகிறது.

அதாவது பெட்டிக் கடை, பல்பொருள் அங்காடி, புத்தகக் கடை, கைவினைப்பொருட்கள், தையல் தொழில், ஜவுளி வணிகம், அழகு நிலையம், விவசாயம், கோழிப்பண்ணை போன்ற சிறு வணிகங்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் மேற்கண்ட தொழில்களுக்கு வழங்கப்பட்ட கடன் மொத்தம் 220.20 கோடி ரூபாய். இதன்மூலம் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பயன்பெற்ற பயனாளர்கள் எண்ணிக்கை மட்டும் 39,069. மேலும், கனரா வங்கி மூலம் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி நிதி நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 377 பயனாளர்களுக்கு மொத்தம் 3.51 கோடி ரூபாய் கடனாக வழங்கியுள்ளது.

மேலும், தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள சிறுபான்மையினருக்கு பயனுள்ள வகையில் நலத்திட்டங்கள் சென்றடைவதை உறுதி செய்ய தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் கடன் திட்டங்களை செயல்படுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், தமிழகத்தின் 38 மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட நிர்வாக அலுவலர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் ஒரு மாதத்தில் 5 முதல் 6 கடன் முகாம்களை நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில், சிறுபான்மையினருக்கான கடன் திட்டங்களின் விவரங்கள் மற்றும் பலன்கள் குறித்து விளக்கப்பட்டு, அவர்கள் சுயதொழில் செய்ய ஊக்குவிக்கும் வகையில் முகாம்கள் நடத்தப்படுகின்றன.

நிதியாண்டின் தொடக்கத்தில் கடன் திட்டங்கள் குறித்து பிரபல செய்தித்தாள்களில் செய்திக்குறிப்பு வெளியிடப்படுகிறது. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கல்விக் கடனுக்கான துண்டுப் பிரசுரங்கள் மற்றும் கடன் திட்டங்களின் விவரங்கள் பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் மற்றும் சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் விநியோகிக்கப்படுகின்றன” என்று தெரிவித்துள்ளார்.

### வங்கக்கடலில்

# ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவடைந்தது!

சென்னை, டிச. 11-

தென்கிழக்கு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்றது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில் இலங்கை - தமிழ்நாடு கடற்கரையை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நெருங்கும் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. வலுவடைந்த காற்றழுத்தம் மேற்குவடமேற்கு திசையில் இலங்கை - தமிழ்நாடு நோக்கி நகர்கிறது. காற்றழுத்த தாழ்வு பகுதி தமிழ்நாடு நோக்கி நகர்வதால் டெல்டா பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குவடமேற்கு திசையில் நகர்ந்து இன்று தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவக்கூடும். தமிழ்நாட்டில் இன்று மற்றும் நாளை, ஒரிரு இடங்களில் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளது. 12 முதல் 20 செ.மீ. வரை மழைக்கு வாய்ப்பு என்பதால் டிச.11, 12 ஆகிய 2 நாட்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காவனூர் மா.தாமோதரன்

### டிசம்பர் 11 (2015)



பேரறிஞர் அண்ணாவின் பேச்சால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கிளைச் செயலாளர், சித்தாமூர் ஒன்றியச் செயலாளர், மாவட்ட அணிகளின் அமைப்பாளராகப் பணியாற்றியவர்.

சூணாம்பேடு ஊராட்சி மன்றத் தலைவராக இரண்டு முறையும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் அன்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த இந்தி எதிர்ப்பு, சட்ட நகல் எரிப்பு, விலைவாசி உயர்வு, இலங்கைத் தமிழர் ஆதரவு உள்ளிட்ட பல போராட்டங்களில் பங்கேற்று ஏறத்தாழ பத்து முறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**